டுள்ளனவா என்பது பற்றி அறிய முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். இதுகுறித்து, இலங்கை அரசிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) புதுக்கோட்டை மாவட்டம் வடக்கு மங்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியாசிரியர் திரு. காசிலிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுவதும் அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி,

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதம் [illegible]0-ஆம் தேதி, புதுக்கோட்டை வெற்றிடம். கொத்தமங்கலம் என்ற ஊரில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய திரு. க. காசிலிங்கம் என்பவரை அவர் ஏதோ மக்கள் முன்னிலையிலே தொடர்பு வைத்திருந்ததாகவும், அதற்குப் பின்னாலே அவர் இலங்கையினுடைய போராளிகளோடு தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயும் கைது செய்யப்பட்டு, இன்றைய தினத்திலே அவர்கள் ஜாமீனிலே வெளிவந்திருக்கிறார்கள். அவரைப் பொறுத்தமட்டில், தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டு இயக்கத்தில், 1987-ஆம் ஆண்டிலிருந்து அதன் மாநிலப் பொருளாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். பொதுவாக கலை இலக்கியப் பெருமன்றத்தினுடைய மெம்பராகவும் தி.ப. ஜீவானந்தம் அவர்கள் உருவாக்கிய 'தாமரை' பத்திரிகையில், தொடர்ந்து பல்வேறு கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றை எழுதியும் இதுபோன்ற முற்போக்கு இதழ்களில் சமூக சேவைகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடியவர். அவரைப் போன்றவர்களையெல்லாம், யாருடைய தூண்டுதலின் பேரிலோ அந்த ஆசிரியரை இன்றைய தினத்திலே கைது செய்விக்கப்பட்டு, அவரைச் சார்ந்திருக்கிற அந்த ஆசிரியர்கள் கூட்டு இயக்கம் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மற்றவர்களிடத்திலேயேயும் வற்புறுத்தியும்கூட, விடாமல் வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அவருடைய தீவிர இயக்கங்களுக்காக அவருக்கும் இலங்கையிலே இருக்கக்கூடிய போராளிகளுக்கும் எந்தவித தொடர்பும் இருக்க சாத்தியமே இல்லை. இப்படிப்பட்ட ஆசிரியர் இயக்கங்கள் போன்ற இயக்கங்களில் இருக்கக் கூடியவர்களைக் காவல் துறையினர் கைது செய்வதை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதோடு, அவர் பேரில் போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று நம்முடைய ஆசிரியப் பெருமக்களை கைது செய்வது, அச்சுறுத்துவது போன்றவற்றுக்குக் காவல்துறை ஈடுபடுவதை நீங்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

1991 செப்டம்பர் 27] [திரு. ஜி. பழனிசாமி]

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மகண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் வடக்குமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியாசிரியர் திரு. காசிலிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருந்ததற்காகவும் அவர்கள் மீது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டனம் செய்ததற்காகவும் 20-9-1991 அன்று கைது செய்யப்பட்டார். இவருடன் சேர்ந்து வன்முறைச் செயலில் ஈடுபடா வண்ணம் தடுத்துநிறுத்தும் நோக்கத்துடன், மேலும் 11 பேர் புதுக்கோட்டைக் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர், இவர்கள் 12 பேரும் தலைமைக் குற்றவியல் நீதிபதி முன் ஆஜர்படுத்த பட்டு பதினைந்து நாட்கள் காவலில் வைக்கப்பட்டனர்.

ஆசிரியர் திரு. காசிலிங்கம் 24-9-1991 அன்று ஜாமீனில் விடப்பட்டார். திரு. காசிலிங்கம் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொருளாளர் ஆவார். இவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும், இவர் மீதான வழக்கைத் திரும்பப் பெறக்கோரியும் 23-9 1991 அன்று தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் உறுப்பினர்கள் 101 பேர் கொத்தமங்கலத்தில் ஊர்வலம் ஒன்றையும் நடத்தியுள்ளனர். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், ஆசிரியர் களைக் கைது செய்வதும், அச்சுறுத்துவதும், ஆகிய நடவடிக்கை கள் நிறுத்தப்பட வேண்டும் என்று இங்கே கருத்துத் தெரி வித்தார்கள். மேலும். ஆசிரியர் திரு. காசிலிங்கம் அவர்கள் மீது போடப்பட்டிருக்கிற வழக்குகளும் திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும் இங்கே கேட்டுக் கொண்டார்.

ஆசிரியர்களைப் பொதுவாக அச்சுறுத்த வேண்டும் என்ற எண்ணம் காவல் துறையினருக்குக் கிடையாது. இந்த அரசு க்கும் கிடையாது. ஆனால், விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கைத் தீவிரவாதிகளுக்கு எதிராக இன்று அரசு மிகவும் கண்டிப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே, விடுதலைப் புலிகளுக்கும். தேசவிரோத சக்திகளுக்கும் ஆதர வாகச் செயல்படுபவர்கள் ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும் சரி, அதற்காக அவர்களை விட்டுவிட முடியாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). நடைமுறையில் சாதாரணமாக எல்லா வழக்குகளும் எப்படி நடத்தப் படுகின்றனவோ அதைப்போலத்தான் இந்த வழக்கும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.